Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House
(A Heritage Hotel)



2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.


| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 169 | உள்ளூர் - 18.06.2026 | வியாழன் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 169 | வெளியூர் - 19.06.2026 | வெள்ளி | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


**சென்ட்ரல் வங்கி 4,500 பணியிடங்கள் பட்டதாரிகளுக்கு!**

**ராஜயோகம்: அதிர்ஷ்டம் குவியும் ராசிகள்!**

**தவெக கூட்டணியில் மதிமுக இணைகிறதா?**

**தமிழக ஆளுநர் உரை முக்கிய அம்சங்கள்!**

# ஜி7 மாநாட்டில் மோடி அதிரடி!



இத்தாலி, ஜூன். 18–

இத்தாலியில் நடைபெற்று வரும் ஜி7 உச்சி மாநாட்டின் இடையே, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உலகத் தலைவர்களுடன் மிக முக்கியமான இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார். குறிப்பாக, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மற்றும் உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி ஆகியோருடன் பிரதமர் மோடி தனித்தனியே நடத்திய சந்திப்புகள் சர்வதேச அரங்கில் பெரும் கவனத்தைப் பெற்றுள்ளன. செயற்கை நுண்ணறிவு பாதுகாப்பு, உலகளாவிய அமைதி மற்றும் இருதரப்பு வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விவகாரங்கள் குறித்து இந்த சந்திப்புகளில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

**AI பாதுகாப்பு குறித்து முக்கிய விவாதம்:**

அதிபர் டொனால்ட் டிரம்ப் மற்றும் பிரதமர் மோடி இடையேயான சந்திப்பில், இந்தியா–அமெரிக்கா இடையிலான மூலோபாய உறவுகளை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வது குறித்து ஆலோசிக்கப்பட்டது. வளர்ந்து வரும் தொழில்நுட்ப உலகில் AI–யின் ஆதிக்கமும், அதனால் ஏற்படும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களும் முதன்மையாக விவாதிக்கப்பட்டன.

AI தொழில்நுட்பத்தை பாதுகாப்பான முறையிலும், மனிதகுல நன்மைக்காகவும் பயன்படுத்துவதற்கான உலகளாவிய விதிகளை உருவாக்குவது குறித்து இரு தலைவர்களும் உடன்பட்டனர். முக்கியமான மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் மூலமாக இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப உறவு களை மேலும் வலுப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கியுடன் சந்திப்பு:**

உக்ரைனில் நிலவி வரும் போர் சூழலுக்கு மத்தியில், அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கியை பிரதமர் மோடி சந்தித்துப் பேசினார்.

போரினால் பாதிக்கப்பட்ட உக்ரைனின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதில் இந்தியாவின் பங்களிப்பு மற்றும் இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தக உறவுகளை மீண்டும் சீரமைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

உக்ரைன்–ரஷ்யா மோதலுக்கு தூதரக ரீதியாகவும், பேச்சுவார்த்தை மூலமாகவும் மட்டுமே தீர்வு காண முடியும் என்ற இந்தியாவின் நிலைப்பாட்டை பிரதமர் மோடி மீண்டும் வலியுறுத்தினார். பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்ட இந்தியா எப்போதும் ஆதரவாக இருக்கும் என்றும் அவர் உறுதியளித்தார்.

“ஜி7 உச்சி மாநாட்டில் அதிபர் டிரம்ப் மற்றும் அதிபர் ஜெலென்ஸ்கி ஆகியோருடனான சந்திப்புகள் மிகவும் பயனுள்ளதாக அமைந்தன. உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளவும், அமைதியை நிலைநாட்டவும் இந்தியா எப்போதும் இணைந்து செயல்படும் என பிரதமர் மோடி தெரிவித்தார்.

# போருக்கு முற்றுப்புள்ளி... புதிய கட்டுப்பாடுகளை விதித்த டிரம்ப்!

வாஷிங்டன், ஜூன். 18–

கோடிக்கணக்கான மக்களுக்கு நற்செய்தியாக ஈரான் போர் முடிவுக்கு வருவதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்தார். இந்நிலையில், அமெரிக்கா – ஈரான் இடையிலான 14 அம்சங்கள் கொண்ட அமைதி ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. இரு தரப்பினரும் ஒப்பந்தத்தில் டிஜிட்டல் முறையில் கையெழுத்திட்டதை அடுத்து, அமெரிக்க–ஈரான் புரிந்துணர்வு ஒப்பந்தம் அதிகாரப்பூர்வமாக இறுதி செய்யப்பட்டது. அதிபர் டொனால்ட் டிரம்ப் மற்றும் ஈரான் அதிபர் மசூத் பெஷெஷ்கியன் ஆகியோர், இரு நாடுகளுக்கும் இடையி லான மோதலை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்த த்தில் முறைப்படி கையெ ழுத்திட்டுள்ளனர். டிரம்ப், வெர்சாய்ஸ் அரண்மனையில் இரவு நடைபெற்ற இரவு விருந்தின்போது அமெரிக்க – ஈரான் ஒப்பந்தத்தின் அசல்




பிரதியிலும் அதிகாரப்பூர்வமாக கையெழுத்திட்டுள்ளார். மேலும், இரவு விருந்து மேசையில் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரானுடன் இருந்த கையெழுத்திடும் நிகழ்வின் காணொளியை வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ளது.இதன் மூலம் இந்த ஒப்பந்தம் உடனடியாக அமலுக்கு வந்துள்ளது.

இதன் மூலம் கடந்த சில மாதங்களாக அமெரிக்கா, ஈரான் இடையே நிலவி வந்த மோதல் முடிவுக்கு வந்திருக்கிறது. ஹார்முஸ் ஜலசந்தியில் வழக்கம் போல கப்பல்கள் இனி செல்ல முடியும். இதனால் உலக சந்தையில் கச்சா எண்ணெய், எல்பிஜி வரத்து அதிகரித்து அவற்றின் விலை குறையும். அமைதி ஒப்பந்தப்படி இரு நாடுகளும் மோதலை நிரந்தரமாக கைவிட வேண்டும். ஈரான் துறைமு கங்களை முடக்கியுள்ள அமெரிக்க படைகள் உடனடி யாக திரும்பப்பெறப்பட வேண்டும். ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் திறக்க வேண்டும் என்பன உள்ளி ட்டவை இரு தரப்பாலும் ஏற்று கொள்ளப்பட்டுள்ளன. அமைதி ஒப்பந்தம் கையெழுத்தான 60 நாட்களில் ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகள் அனைத்தும் இரு தரப்பும் முழுமையாக அமல்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், லெபனானில் ஹிஸ்புல்லா ஆயுதக்குழு மீதான தாக்குதலையும் இஸ்ரேல் நிறுத்த வேண்டும் என்று ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா – ஈரான் இடையே கையெழுத்தாகியுள்ள அமைதி ஒப்பந்தத்திற்கு ஐநா அமைப்பு, மத்திய கிழக்கு நாடுகள் உட்பட பல்வேறு தரப்பும் வரவேற்பு தெரிவித்துள்ளது. இதற்கிடையே ஒப்பந்தத்தில் உள்ள அம்சங்களுக்கு உடன்படவில்லை என்றால் ஈரான் மிக கடுமையான தாக்குதலை எதிர்கொள்ளும் என அமெரிக்க அதிபர் டிரம்ப் புது கண்டிஷன் போட்டிருக்கிறார்.




ஜூன் 22

முதலமைச்சர்

விஜய்

பிறந்த நாள்

சிறப்பு மலர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. விஜய் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சிறப்பு வாழ்த்து விளம்பரங்கள் வெளியிட்ப்பட உள்ளன.

வாழ்த்துக்கள்...

மக்களின் இதயத்தில் இடம்பிடித்த தலைவர்...
என்றும் மக்கள் பணியில்...
என்றென்றும் எங்கள் நெஞ்சில்...

விளம்பரக் கட்டணம்

| | கருப்பு & வெள்ளை | கலர் |
|---|---|---|
| கால் பக்கம் | ₹3,000 | ₹5,000 |
| அரை பக்கம் | ₹8,000 | ₹10,000 |

தங்களின் வாழ்த்து விளம்பரங்களை முன்பதிவு செய்து வெளியிட சிறந்த வாய்ப்பு.

விளம்பரப் பிரிவு 7904806432

முன்பதிவு அவசியம்


## தமிழக வரலாற்றில் கூட்டணி ஆட்சி மூலம் புதிய சாதனை

# இருமொழிக் கொள்கை தொடரும்! புதிய கல்விக்கொள்கை ஏற்கப்படாது!

## தமிழக ஆளுநர் உரை முக்கிய அம்சங்கள்!!



சென்னை, ஜூன். 18–

தமிழகத்தின் 17வது சட்டப்பேரவைக் கூட்டம் ஆளுநர் ஆர்.வி.அர்லேகர் தலைமையில் இன்று காலை 10 மணிக்குத் தொடங்கியது. முன்னதாக தமிழக சட்டப்பேரவைக்கு வருகை தந்த ஆளுநரை தமிழக சட்டப்பேரவை சபாநாயகர், சட்டப்பேரவைச் செயலர் ஆகியோர் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர்.

இந்த கூட்டத்தொடர் தமிழ்த் தாய் வாழ்த்துடன் தொடங்கியது, இரண்டாவதாக தேசிய கீதம் பாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆளுநர் அர்லேகர் உரையை வாசித்தார்.

முன்னதாக முதல்வர் மற்றும் அமைச்சர்கள் பதவியேற்பு விழாக்களின் போது, ஆளுநர் மாளிகையில் முதலில் வந்தே மாதரமும், இரண்டாவதாக தேசிய கீதமும், மூன்றாவதாக தமிழ்த் தாய் வாழ்த்தும் பாடப்பட்டது சர்ச்சையை உருவாக்கியது. இந்தச் சூழலில், இன்றைய சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் தமிழ்த் தாய் வாழ்த்துடன் தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆளுநர் அர்லேகர் தனது உரையில் அண்ணா, பெரியார், காமராஜர், அம்பேத்கர் ஆகியோரின் பெயர்களைக் குறிப்பிட்டுப் பேசினார். அவர் தனது உரையை 39 நிமிடங்களில் நிறைவு செய்தார். அரசு உரையை எந்த மாற்றமுமின்றி ஆளுநர் வாசித்ததாகவே தெரிகிறது.

**ஆளுநர் உரையில் இடம்பெற்ற முக்கிய அம்சங்கள் வருமாறு:**

பெரியார், அண்ணா, காமராஜர், அம்பேத்கர், வேலு நாச்சியார், அஞ்சலை அம்மாள் ஆகியோரை கொள்கை தலைவர்களாக கொண்டு, சாதி, மத, பண அரசியலை தாண்டி தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல முதல்வர் விஜய்யால் மட்டுமே முடியும் என மக்கள் முடிவு செய்து தேர்தெடுத்துள்ளனர்.

தமிழக அரசு வரலாற்றில் இல்லாத வகையில் ‘ஆட்சியிலும் பங்கு, அதிகாரத்திலும் பங்கு’ என்று கூட்டணி ஆட்சி மூலம் புதிய சாதனை செய்யப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசு தமிழகத்துக்கு தேவையான உதவிகளை செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒன்றிய அரசுக்கு தமிழக மக்கள் செலுத்தும் வரியிலிருந்து, தமிழகத்துக்கு உரிய நிதிப்பகிர்வினைப் பெற சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்படும்.

தமிழகத்தில் மாநில நலன் குறித்து ஒன்றிய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தப்படும். ஒன்றிய அரசிடம் இருந்து தமிழகத்துக்கான நிதிப்பகிர்வினை பெற சட்டவல்லுநர் குழு அமைக்கப்படும். தமிழகத்துக்கு வரவேண்டிய ஒவ்வொரு ரூபாய் வருவாயும் முறையாக ஆவணப்படுத்தப்பட்டு, தமிழகத்துக்கான ஒன்றிய அரசின் பாரபட்சமான அணுகுமுறை அறிக்கையாக வெளியிடப்படும். தமிழகத்துக்கான நியாயமான நிதிப்பகிர்வை ஒன்றிய அரசிடம் இருந்து பெறுவது உறுதிசெய்யப்படும்.

கடந்த 5 ஆண்டுகளில் தமிழகத்தின் நிதி நிலைமை மிக மோசமான நிலையை அடைந்துள்ளது. தமிழகத்தில் கடன் அளவு ரூ.10 லட்சம் கோடியை எட்டியுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் தமிழகத்தின் கடன் இரு மடங்காக உயர்ந்துள்ளது. நிதிப்பற்றாக்குறை இருந்தாலும், இந்த அரசு கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும்.

போதைப்பொருளை முழுமையாக ஒழிக்க இந்த அரசு உறுதியான நடவடிக்கை எடுத்து வருகிறது.

மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு பாதுக்காப்பான சூழலை உருவாக்குவதே இந்த அரசின் நோக்கம் ஆகும். தவறு செய்யும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

வழிபாட்டு தலங்கள், பள்ளிகளுக்கு அருகில் இருந்த 717 மதுக்கடைகளை இந்த அரசு மூடியுள்ளது.

கனிமவளத்துறையில் நடக்கும் ஊழல் மூலம், அந்த துறையின் வருவாய் குறைந்துள்ளது. இயற்கை வளக் கொள்ளையை தடுத்து அரசின் வருவாயை பெருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சிறு, குறு விவசாயிகள் பெ ற்ற ரூ.75 ஆயிரம் வரையிலான கடன் முற்றிலும் தள்ளுபடி செய்யப்பட்டது. நீர்நிலைகளில் இருந்து வண்டல் மண் எடுக்க விவசாயிகளுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேகேதாட்டு விவகாரத்தில் தமிழகத்தின் சட்ட நடவடிக்கைகள் தொடரும். உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டும், தமிழகத்துக்கு உபரி நீரை மட்டுமே கர்நாடக அரசு கொடுத்து வருகிறது.

லஞ்ச, ஊழல் இல்லாத நேர்மையான நிர்வாகத்தை கொண்டு வருவதே இந்த அரசின் நோக்கம்.

தமிழகத்தில் இரு மொழிக் கொள்கையே தொடரும். கல்வியை பொதுப் பட்டியலில் இருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வலியுறுத்தப்படும். புதிய கல்விக் கொள்கையை தமிழக அரசு எதிர்க்கும்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழ் மொழியை வழக்காடு மொழியாக மாற்ற அனுமதிக்க வேண்டும். உச்ச நீதிமன்றத்தின் கிளையை சென்னையில் அமைக்க வலியுறுத்தப்படும்.

முல்லை பெரியாறு அணைக்கு மாற்றாக கேரள அரசு அணை கட்டும் முயற்சியை தமிழக அரசு தடுத்து நிறுத்தும். கல்வித்துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

மத்திய அரசு சாதிவாரி கணகெடுப்பை விரைந்து முடிக்க வேண்டும். மத்திய அரசின் கணக்கெடுப்பு முடிந்தவுடன், தமிழக அரசு சமூக நீதி சர்வே நடத்தும்.

மீனவர் பிரச்சினையை தீர்க்க ஒன்றிய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்தில் நடைமுறையில் உள்ள 69% இடஒதுக்கீடு பாதுகாக்கப்படும். ஒற்றை சாளர முறையில் தொழில் தொடங்க அனுமதி வழங்கப்படும். 2031ல் இந்தியாவின் முன்மாதிரி மாநிலமாக தமிழகம் மாறும்.

இந்து சமய அறநிலையத்துறையில் அமைப்பு ரீதியான மாற்றங்கள் செய்யப்படும். இவ்வாறு ஆளுநர் உரையில் தவெக அரசின் நிலைப்பாடுகள் பலவும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஜனவரி மாதம் அப்போதைய ஆளுநர் ஆர்.என்.ரவி தலைமையில் சட்டப்பேரவைக் கூட்டம் தொடங்கியது. ஆளுநர் ரவி, வந்தே மாதரம் பாடல் இசைக்கப்படாததை சுட்டிக்காட்டி, அரசு தயாரித்து அளித்த உரையைப் பேரவையில் வாசிக்காமல் வெளியேறினார்.

அதன்பின், அரசு தயாரித்து அளித்த உரை மட்டுமே பேரவைக் குறிப்பில் இடம்பெற வேண்டும் என்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அப்போதைய பேரவைத் தலைவர் மு.அப்பாவு தமிழ் உரையை வாசித்தார் என்பது இங்கே நினைவுகூரத்தக்கது.

தலையங்கம்
மதுரை மணி
வியாழக்கிழமை 18.06.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆனி மாதம் 04-ம் தேதி

# “போரின் நிழலில் சமாதானத்தின் கையெழுத்து... உலக அரசியலின் அடுத்த நகர்வு என்ன?”




மத்திய கிழக்கு பிராந்தியத்தில் பல ஆண்டுகளாக நீடித்து வரும் பதற்றத்தின் மையமாக ஈரான் அமெரிக்கா உறவு இருந்து வருகிறது. அணு ஆயுத திட்டம், பொருளாதார தடைகள், பிராந்திய ஆதிக்கப் போட்டி மற்றும் பாதுகாப்பு அச்சங்கள் ஆகியவை இரு நாடுகளுக்கும் இடையே நீண்டகால மோதலை உருவாக்கியுள்ளன. இந்த நிலையில், போர் சூழலை தவிர்க்கும் வகையில் புதிய ஒப்பந்தம் அல்லது சமரச முயற்சிகள் குறித்து தகவல்கள் வெளியாகி வருவது உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

ஈரான் மற்றும் அமெரிக்கா நேரடி போரை விரும்பாத நாடுகளாகவே பார்க்கப்படுகின்றன. ஏனெனில், இந்த மோதல் இரு நாடுகளை மட்டுமல்லாது முழு மத்திய கிழக்கு பிராந்தியத்தையும் பாதிக்கும் ஆற்றல் கொண்டது. குறிப்பாக எண்ணெய் வளம் மிகுந்த ஹோர்முஸ் நீரிணை பகுதியில் ஏதேனும் பதற்றம் ஏற்பட்டால், உலகளாவிய எண்ணெய் விலைகள் கடுமையாக உயரக்கூடும். இதனால் இந்தியா உள்ளிட்ட எண்ணெய் இறக்குமதி நாடுகளின் பொருளாதாரத்திலும் தாக்கம் ஏற்படும்.

ஒருவேளை புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும் பட்சத்தில், முதலில் பதற்றம் குறையும். பொருளாதார தடைகளில் சில தளர்வுகள் வழங்கப்படலாம். ஈரானின் எண்ணெய் ஏற்றுமதி அதிகரிக்கும் வாய்ப்பும் உருவாகும். இதனால் உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை கட்டுக்குள் வரலாம். சர்வதேச முதலீட்டாளர்களின் நம்பிக்கையும் மீண்டும் உயரும்.

ஆனால் ஒப்பந்தம் கையெழுத்தாகிறது என்பதாலேயே அனைத்து பிரச்சினைகளும் முடிவுக்கு வரும் என்று கூற முடியாது. அணு ஆயுத திட்டம், இஸ்ரேல் பாதுகாப்பு, பிராந்திய ஆயுதக் குழுக்களுக்கு ஆதரவு போன்ற பல முக்கிய விவகாரங்கள் இன்னும் தீர்வு காணப்பட வேண்டியவையாக உள்ளன. எனவே ஒப்பந்தம் ஏற்பட்டாலும், அதன் செயல்பாடுகள் மற்றும் இரு தரப்பினரின் நம்பிக்கை கட்டமைப்பு மிகவும் முக்கியமானதாக இருக்கும்.

மறுபுறம், பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தால் நிலைமை மேலும் மோசமடையக்கூடும். பொருளாதார தடைகள் தீவிரமடையலாம். இராணுவ நடவடிக்கைகள் அதிகரிக்கலாம். இது உலக பொருளாதாரத்திற்கும், சர்வதேச வர்த்தகத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே, ஈரான் அமெரிக்கா இடையேயான எந்த ஒப்பந்தமும் வெறும் இருதரப்பு உடன்படிக்கையாக மட்டும் பார்க்கப்பட முடியாது. அது உலக அமைதி, எரிசக்தி பாதுகாப்பு மற்றும் சர்வதேச பொருளாதார நிலைத்தன்மையுடன் நேரடியாக தொடர்புடையதாகும். தற்போது உலக நாடுகள் எதிர்பார்ப்பது போர் அல்ல; நிலையான சமாதானம். அந்த பாதையில் இந்த ஒப்பந்தம் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமையுமா என்பது வரவிருக்கும் நாட்களில் தெளிவாகும்.

# ஒட்டன்சத்திரத்தில் ஜமாபந்தி!



ஒட்டன்சத்திரம், ஜூன். 18–

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டத்தில் 1435–ம் பசலிக்கான வருவாய் கிராமங்களுக்கான வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் திண்டுக்கல், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் சா.ஜஸ்டின் சாந்தப்பா தலைமையில் நடைபெற்றது.

இதில் ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் வி.சஞ்சய் காந்தி, தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) லட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக சின்னக்காம்பட்டி உள் வட்டம், வருவாய் கிராமங்களான கொ.கீரனூர், சின்னக்காம்பட்டி, எல்லப்பட்டி, மார்க்கம்பட்டி, குத்திலிப்பை, ஒடைப்பட்டி, ஐ.வாடிப்பட்டி, எம்.அத்தப்பன்பட்டி, நவக்காணி, மண்டவாடி, அம்பிளிக்கை, சிந்தலைப்பட்டி மற்றும் காப்பிலியபட்டி ஆகிய கிராமங்களுக்காக நடைபெற்ற ஜமாபந்தியில் கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் பட்டா மாறுதல், உட்பிரிவு, குடும்ப அட்டை, இலவச பட்டா மற்றும் முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய மனுவினை ஜமாபந்தி அதிகாரி சா.ஜஸ்டின்சாந்தப்பா – விடம் மனு அளித்தனர். உரிய மனுக்களுக்கு உடனடி தீர்வு வழங்கப்பட்டது. இதில் வட்ட வழங்கல் அலுவலர் உஷா, தேர்தல் துணை வட்டாட்சியர் பாலசுப்பிரமணி, துணை வட்டாட்சியர்கள் அய்யா மணி, அபுதாகீர், அன்சாரி, வருவாய் ஆய்வாளர் ஜெகதீசன், மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள், கிராம உதவியாளர்கள், வட்டாட்சியர் அலுவலக அலுவலர்கள மற்றும்; பொது மக்கள் திரளானோர் கலந்துகொண்டனர்.

# திருச்செந்தூர் முருகன் கோயிலில் புதிய விதிகள்!




திருச்செந்தூர், ஜூன். 18–

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாவது படை வீடாக விளங்கும் திருச்செந்தூர் கோவில் நிர்வாகம் பக்தர்களுக்கு சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

**செல்போன் கொண்டு செல்ல தடை:**

இதுகுறித்து திருச்செந்தூர் கோயில் நிர்வாகம் வெளியிட்ட அறிவிப்பில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை இருக்கை பொதுநல நீதிப்பேராணை மனு W.P(MD) No.25439/2022 வழக்கில் வழங்கியுள்ள தீர்ப்பில், திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலினுள், பக்தர்கள் கைபேசிகளை பயன்படுத்து வதை தடை செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், கடந்த 14.11.2022 முதல் திருக்கோயிலுக்குள் கைபேசி (Mobile Phone) பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. தற்போது, மேற்படி நீதிமன்ற உத்தரவை முழுமையாக செயல்படுத்துவதற்காக எதிர்வரும் 2026, ஜூலை 1ஆம் தேதி முதல் கைபேசி பயன்படுத்த விதிக்கப்பட்டுள்ள தடையானது மிகத் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட வுள்ளது.

அதன் பொருட்டு, திருக்கோயிலுக்குள் பக்தர்கள் அனுமதிக்கப்படும் பொது தரிசன வரிசை, ரூ.100 விரைவு தரிசன கட்டண வரிசை, மூத்தக்குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான வரிசை போன்ற அனைத்துப் பகுதிகளிலும், பக்தர்கள் முழுமையாகப் பரிசோதனை செய்யப்பட்டு அதன் பின்னரே திருக்கோயிலுக்குள் அனுமதிக்கப்படவுள்ளனர்.

எனவே, பக்தர்கள் இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் போது தங்களது கைபேசிகளை, தாங்கள் தங்கியிருக்கும் இடங்களிலோ அல்லது தங்களது வாகனங்களிலோ பாதுகாப்பாக வைத்துவிட்டு சுவாமி தரிசனம் செய்ய திருக்கோயிலுக்கு வருகை தர வேண்டும் என கோயில் நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

**நடவடிக்கை எடுக்கப்படும்:**

மேலும், பக்தர்கள். தமது கைபேசிகளை பாதுகாப்பாக வைப்பதற்காக ஆங்காங்கே திருக்கோயில் நிர்வாகம் சார்பில் கைபேசி வைப்பிடங்கள் (Mobile Deposit Counter) நிறுவப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி பக்தர்கள் தங்கள் கைபேசிகளை பாதுகாப்பாக வைத்துவிட்டு தரிசனத்திற்கு செல்லுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பரிசோதனையின் போது பக்தர்களிடம் கைபேசிகள் இருப்பது கண்டறியப்பட்டால் அவற்றைப் பறிமுதல் செய்து பாதுகாப்பு பெட்டகங்களில் வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**மாற்று ஏற்பாடுகள்:**

மேலும், பக்தர்களின் அவசர பயன்பாட்டிற்காக, மருத்துவ மையம், ஆம்புலன்ஸ் வசதி, பொது அறிவிக்கை அமைப்பு (Public Addressing Systom). ஒலிபெருக்கிகள், மின்கல ஊர்திகள் மற்றும் சக்கர நாற்காலி உள்ளிட்ட வசதிகள் திருக்கோயில் நிர்வாகத்தால் ஏற்படுத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. எனவே, மாண்பமை உயர்நீதிமன்ற உத்தரவின்படி எதிர்வரும் 01.07.2026 முதல் திருக்கோயிலுக்குள் கைபேசியின்றி தரிசனம் செய்தவை முழுமையாக நடைமுறைப்படுத்த தேவையான ஒத்துழைப்பு நல்கிட பக்தர்கள் மற்றும் பொதுமக்களை அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விஜய் பிறந்தநாள் சிறப்பு: இரு தினங்கள் உயிரியல் பூங்காக்கள் இலவசம்!




சென்னை, ஜூன். 18–

முதலமைச்சர் விஜயின் பிறந்தநாளையொட்டி ஜூன் 21, 22 என இரு தினங்கள் வண்டலூர், வேலூர் அமிர்தி, சேலம் குரும்பட்டி போன்ற உயிரியல் பூங்காக்களில் நுழைவுக் கட்டணமின்றி சென்று வரலாம்; வனத்துறை அமைச்சர் ரஞ்சித் குமார் அறிவித்துள்ளார்.

# “அரசு தடை வீண்? VPN மூலம் டெலிகிராமை தொடரும் இந்திய பயனர்கள்!”




புதுடெல்லி, ஜூன். 18–

ஜூன் 21 அன்று நடைபெறவுள்ள NEET–UG மறுதேர்வுக்கு முன்னதாக, ஜூன் 22, 2026 வரை இந்தியா முழுவதும் டெலிகிராம் (Telegram) செயலிக்குத் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. தேசியத் தேர்வுகள் முகமையின் (NTA) பரிந்துரையின் பேரில், தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் பிரிவு 69A–ன் கீழ் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY) இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. போலி வினாத்தாள்களை விற்பனை செய்ய இத்தளத்தைப் பயன்படுத்தும் தேர்வு முறைகேட்டுக் கும்பல்களைக் கட்டுப்படுத்துவதே இதன் நோக்கமாகும். இருப்பினும், தடை இருந்தபோதிலும் VPN–களைப் பயன்படுத்தித் தாங்கள் டெலிகிராம் செயலியை அணுக முடிவதாகச் சமூக ஊடகங்களில் பலர் தெரிவித்தனர்.



இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டாட்சியர் அலுவலகத்தில் 1435–ம் பசலிக்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி)–ல், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சிவகுரு பிரபாகரன், பொதுமக்களிடம் மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார். கீழக்கரை வட்டாட்சியர் ராம சுப்பிரமணியன் மண்டல துணை வட்டாட்சியர் முத்துராமலிங்கம் மற்றும் அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.

# பள்ளி - கல்லூரி மாணவர்களுக்கிடையேயான திருக்குறள் பேச்சு, ஓவியம் மற்றும் கட்டுரைப் போட்டி!

மதுரை, ஜூன். 18–

இந்தியாவில் நிதி வர்த்தகத்தில் முன்னணி இடத்தை வகித்து வரும் ஸ்ரீராம் குழும நிறுவனங்களின் ஒரு அங்கமாகிய ஸ்ரீராம் இலக்கியக் கழகம், வரும் ஜூலை 18 முதல் ஆகஸ்ட் 30 வரை தமிழகம் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த பள்ளி மற்றும் கல்லூரி மாணவ / மாணவியரிடையே திருக்குறள் பேச்சு, ஓவியம் மற்றும் கட்டுரைப் போட்டிகளை நடத்த இருக்கிறது.

**நடைபெறும் இடங்கள்:**

இப்போட்டிகள், 12 மையங்களில் நடத்தப்படும். மதுரையில், ஆகஸ்ட் 22 அன்று மதுரைக் கல்லூரியில் நடைபெறுகிறது. மதுரை தவிர, ஜூலை 18 சேலத்திலும், ஜூலை 19 வேலூரிலும், ஜூலை 25 திருவாரூரிலும், ஜூலை 26 புதுச்சேரியிலும், ஆகஸ்ட் 1 ஈரோட்டிலும், ஆகஸ்ட் 2 கோவையிலும், ஆகஸ்ட் 8 தஞ்சாவூரிலும், ஆகஸ்ட் 9 திருச்சியிலும், ஆகஸ்ட் 23 நெல்லையிலும், ஆகஸ்ட் 29 சென்னையிலும், ஆகஸ்ட் 30 தாம்பரத்திலும், நடைபெறவுள்ளது.

இடைநிலை (6 – 8 ஆம் வகுப்புகள்), மேல்நிலை (9 – 12 ஆம் வகுப்புகள்), கல்லூரி என மூன்று பிரிவுகளாக இப்போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதில் பங்கு பெற விரும்புவோர் இதற்கான விண்ணப்பப் படிவத்தினை அருகிலுள்ள ஸ்ரீராம் சிட்ஸ் கிளைகளில் பெற்றுக் கொள்ளலாம். அல்லது www.shriramchits.com என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மாணவ சமுதாயத்தினரிடையே திருக்குறளின் கருத்துகளைப் பரப்பவும், தமிழாற்றலை வளர்க்கவும், வரையும் திறனை ஊக்குவிக்கவும் கடந்த 1988–ஆம் ஆண்டு முதல் ஸ்ரீராம் இலக்கியக் கழகம் இப்போட்டியினை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

# திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஜமாபந்தி நிறைவு விழா!




திருப்பத்தூர், ஜூன். 18–

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் நகரப் பகுதியில் அமைந்துள்ள வட்டாட்சியர் அலுவலகம் ஜமாபந்தி நிறைவு நாள் விழா நடைபெற்றது இதில் திருப்பத்தூர் கிராமங்களின் பட்டா பெறுதல் மற்றும் விவசாயம் சார்ந்த மனுக்கள் மாற்றுத்திறனாளிகள் மனுக்கள் போன்றவை தங்களுடைய குறைகளை ஜமாபந்தியில் மனுக்களாக கொடுத்தனர் ஜமாபந்தி ஆனது 7 நாட்கள் நடைபெற்றது இதில் பெற்ற மொத்த அனுக்கள் 1095 மனுக்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் 150 மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டு கொடுக்க ப்பட்ட மனுவின் மீது நடவடி க்கை எடுக்கப்பட்டு இன்று ஜமாபந்தி நிறைவு நாள் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன். கோட்டாட்சியர் வரதராஜன். வட்டாட்சியர் நவநீதம். மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் ஆகியோர் ஜமாபந்தி நிறைவு நாளில் மனுக்கள் மீது நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டது.

## இம்மாத இறுதி அல்லது ஜூலை தொடக்கத்தில்

# பி.எஸ்.எல்.வி. ரக ராக்கெட்டை விண்ணில் ஏவ இஸ்ரோ திட்டம்!




சென்னை, ஜூன். 18–

டெல்லியில் பிரதமர் மோடி தலைமையிலான அரசின் 12 ஆண்டுகளை கொண்டாடும் நிகழ்வில் கலந்து கொண்ட, மத்திய அறிவியல் தொழில்நுட்பம், புவி அறிவியல் துறை மந்திரி டாக்டர் ஜிதேந்திர சிங் கூறும்போது. ‘பி.எஸ்.எல்.வி. யைப் பொறுத்தவரை, இம்மாதம் (ஜூன்) இறுதி அல்லது ஜூலை தொடக்கத்தில் விண்ணில் ஏவ திட்டமிட்டுள்ளோம். நாட்டின் மனித விண்வெளிப் பயணமான ககன்யான் திட்டத்தில் கவனம் செலுத்தப்படுகிறது. கொரோனா தொற்று காரணமாக, பயிற்சி பெற்று வந்த விண்வெளி வீரர்கள் ரஷியாவிலிருந்து திரும்ப அழைக்கப்பட்டதால், ககன்யான் திட்டம் தாமதமானது. ஆனால், இந்த ஆண்டு இறுதிக்குள் அனைத்து சோதனை ராக்கெட்டுகளையும் முடிக்க முடியும் என்று நம்பப்படுகிறது.



# ராகு அருளால் ராஜயோகம்: அதிர்ஷ்டம் குவியும் ராசிகள்!




ராசிகளும் கிரகங்களும் அவ்வப்போது தங்கள் நிலைகளை மாற்றிக்கொள்கின்றன. இந்த மாற்றங்கள் சில சமயங்களில் சாதகமாகவும், சில சமயங்களில் பாதகமாகவும் அமையலாம். எதுவாக இருந்தாலும், இதன் தாக்கம் 12 ராசிகளின் மீதும் இருக்கும் என்று ஜோதிடர்கள் கூறுகின்றனர்.

கிரகங்கள் அவ்வப்போது ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாறுகின்றன. விரைவில் சூரியன் ராகு மற்றும் ஆருத்ரா நட்சத்திரங்களின் ஆதிக்கத்திற்குள் பெயர்ச்சி அடையவுள்ளார். இது சம்பந்தப்பட்ட ராசிக்காரர்களுக்கு மிகுந்த நல்லிணக்கத்தை ஏற்படுத்தும். மேலும், நீங்கள் தொடும் காரியங்கள் அனைத்தும் வெற்றியாக (பொன்னாக) மாறும். அனைத்துத் தரப்பு மக்களுக்கும் இது ஒரு நல்ல காலகட்டமாகும்.

**சிம்மம்:** இந்த ராசியில் பிறந்தவர்கள் விரைவில் ராகுவின் அருளால் தங்கள் அனைத்துப் பணிகளையும் வெற்றிகரமாக முடிப்பார்கள். காலப்போக்கில், நீங்கள் விரும்பிய அனைத்தையும் அடைவீர்கள். தொழிலில் அதிக லாபம் கிடைக்கும். திருமண வாழ்க்கையிலும் மாற்றங்கள் ஏற்படும். முதலீடுகளைச் செய்வதற்கு முன் இருமுறை யோசிக்கவும்; முதலீடு செய்யப்படும் பணம் வீணாகாது. இக்காலகட்டத்தில் நிலம் வாங்குவதற்கான வாய்ப்பும் உள்ளது.

**கும்பம்:** ராகுவின் அருளால் அனைத்துக் கடன்களும் அடைபடும். விரைவில் வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். இதுவரை நடக்கும் என்று எதிர்பார்க்காத விஷயங்கள் அனைத்தும் நடக்கும். குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் வெளியில் செல்லும்போது எதிர்கொள்ளும் பெரிய சிக்கல்களிலிருந்து விடுபடுவார்கள். மேலும், சில புதிய அறிமுகங்கள் அவர்களின் வாழ்க்கையில் புதிய மாற்றங்களைக் கொண்டுவரும்.




# தமிழ்நாடு மணல் லாரி உரிமையாளர்கள் சங்க ஆலோசனைக் கூட்டம்!

திருப்பத்தூர், ஜூன்.18–

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் நகர் பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு மணல் லாரி உரிமையாளர் சங்கம் மற்றும் திருப்பத்தூர் டிப்பர் லாரி உரிமையாளர் நல சங்கம் சார்பில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

## சினிமா துளிகள்..!

# ஜூன் 18, 2026 ஹாலிவுட், பாலிவுட், கோலிவுட் சினிமா ஹாட் அப்டேட்ஸ்!

**ஹாலிவுட்**

நடிகர் Hrithik Roshan ஹாலிவுட் நோக்கி முக்கிய நகர்வு மேற்கொண்டுள்ளார். அமெரிக்காவின் முன்னணி தயாரிப்பு மற்றும் மேலாண்மை நிறுவனமான Anonymous Content–உடன் இணைந்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

Netflix–ல் புதிய ஹாலிவுட் தொடர் “I Will Find You” இன்று (ஜூன் 18) வெளியாகிறது. ரசிகர்கள் மத்தியில் அதிக எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது.

**பாலிவுட்**

நடிகை Jacqueline Fernandez முதல் முறையாக முழுநீள ஹாரர் திரைப்படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். படப்பிடிப்பு ஜூன் இறுதியில் தொடங்குகிறது.

Shah Rukh Khan நடிக்கும் பிரம்மாண்ட ஆக்ஷன் படம் King குறித்த எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. இந்த படத்திற்கு இசையமைப்பாளர் Anirudh Ravichander இசையமைத்து வருகிறார்.

Cocktail 2, Welcome To The Jungle உள்ளிட்ட பல பெரிய பாலிவுட் படங்கள் அடுத்த வாரங்களில் வெளியாக உள்ளன.

**கோலிவுட்**

Sivakarthikeyan தனது அடுத்த படமான SK26 குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என உறுதி செய்துள்ளார்.

இளம் நடிகர்கள் மற்றும் புதிய இயக்குநர்களின் படங்கள் ஜூன் இறுதியில் வெளியாக உள்ளதால், கோலிவுட்டில் போட்டி சூடுபிடித்துள்ளது.

**சினிமா கிசுகிசு**

பாலிவுட் நடிகர்கள் தென்னிந்திய படங்களில் அதிக அளவில் நடிக்கத் தொடங்கியுள்ளனர். இது பான்–இந்தியா சினிமா வளர்ச்சிக்கு புதிய பாதையை உருவாக்கி வருகிறது.

**இன்று சினிமா உலகின் முக்கிய ஹாட் டாபிக்:**

“ஹாலிவுட் கனவை நோக்கி ஹிருத்திக் ரோஷன் ஹாரர் உலகில் ஜாக்குலின் பெர்னாண்டஸ்!

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## எச்சரிக்கை! இந்த நோயாளிகள் கேரட் சாப்பிடுவது ஆபத்து..!




கண் பார்வையை மேம்படுத்துவதிலும் சருமத்தைப் பொலிவாக்குவதிலும் கேரட்டுக்கு ஈடு இணையான காய்கறி வேறெதுவும் இல்லை. வைட்டமின்கள், தாதுக்கள் குறிப்பாக வைட்டமின் A, பீட்டா–கரோட்டின் மற்றும் ஆன்டி–ஆக்ஸிடன்ட்கள் நிறைந்த கேரட்டை நாம் சாம்பார், பொரியல், சூப் அல்லது ஜூஸ் வடிவில் அடிக்கடி உண்கிறோம். கெட்ட கொழுப்பைக் குறைப்பதிலும், நல்ல கொழுப்பை அதிகரிப்பதிலும், உடல் எடையைக் குறைக்க விரும்புவோருக்குத் தேவையான நார்ச்சத்து மூலம் பசியைக் கட்டுப்படுத்துவதிலும் கேரட் ஒரு சிறந்த உணவாக (superfood) விளங்குகிறது. கர்ப்பிணிப் பெண்களுக்கும் இது மிகவும் நல்லது.

இருப்பினும், அமிர்தம் போன்ற இந்த கேரட் அனைவருக்கும் ஒரே மாதிரியான நன்மைகளைத் தருவதில்லை. மருத்துவர்களின் கூற்றுப்படி, சில குறிப்பிட்ட உடல்நலப் பிரச்சினைகள் உள்ளவர்கள் கேரட்டை அளவுக்கு அதிகமாக உட்கொண்டால், அது உடலில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி உயிருக்கே ஆபத்தை விளைவிக்கக்கூடும். இப்போது, எந்தெந்த நோய்கள் உள்ளவர்கள் கேரட் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்பதை பார்க்கலாம்..

**சிறுநீரகக் கல் பிரச்சினை உள்ளவர்கள்**

சிறுநீரகக் கற்கள், குறிப்பாக கால்சியம் ஆக்சலேட் கற்கள் உள்ளவர்கள் கேரட் சாப்பிடும்போது மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். கேரட்டில் இயற்கையாகவே ஆக்சலேட் அதிகம் உள்ளது. இது சிறுநீரகக் கற்கள் வேகமாக வளரவோ அல்லது புதிய கற்கள் உருவாகவோ வழிவகுக்கும். எனவே, இத்தகைய நோயாளிகள் கேரட்டை மிகக் குறைந்த அளவிலேயே உட்கொள்ள வேண்டும்.

**நீரிழிவு நோய்**

நீரிழிவு நோயாளிகள் பச்சைக் கேரட்டை அளவாகச் சாப்பிடுவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், கேரட் ஜூஸ் குடிப்பது அல்லது அதிக அளவில் உட்கொள்வது நல்லதல்ல. கேரட்டில் இயற்கையான சர்க்கரை உள்ளது. அதை ஜூஸாக மாற்றும்போது, அதிலுள்ள நார்ச்சத்து குறைந்து, கிளைசெமிக் குறியீடு (glycemic index) அதிகரிக்கிறது. இதனால் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு திடீரென உயர்கிறது.

**வாயுத் தொல்லை, வயிறு உப்புசம் வயிற்றுப் பிரச்சினைகள்**

வாயுத் தொல்லை, அமிலத்தன்மை (acidity), உடல் எடை அதிகரிப்பு அல்லது வயிறு உப்புசம் போன்ற செரிமானப் பிரச்சினைகள் உள்ளவர்கள் கேரட் சாப்பிடும்போது கவனமாக இருக்க வேண்டும். கேரட்டில் நார்ச்சத்து அதிகம் உள்ளது. நார்ச்சத்து பொதுவாக உடலுக்கு நல்லது என்றாலும், செரிமான மண்டலம் பலவீனமாக இருக்கும்போது அதை அதிகமாக உட்கொள்வது அஜீரணம் மற்றும் கடுமையான வயிற்று உபாதைகளுக்கு வழிவகுக்கும்.

**கல்லீரல் பலவீனம் மஞ்சள் காமாலை**

பலவீனமான கல்லீரல் அல்லது மஞ்சள் காமாலை உள்ளவர்கள் கேரட்டை மிகக் குறைந்த அளவிலேயே உட்கொள்ள வேண்டும். கேரட்டை அளவுக்கு அதிகமாகச் சாப்பிட்டால், அதிலுள்ள பீட்டா–கரோட்டினை கல்லீரலால் சரியாகச் செயலாக்க முடியாது. இதனால் கரோட்டின் உடலில் தேங்கி, சருமம் லேசாக மஞ்சள் நிறமாக மாறக்கூடும். மருத்துவ ரீதியாக இது 'கரோட்டினீமியா' (carotenemia) என்று அழைக்கப்படுகிறது.

**ஒவ்வாமை (Allergy) பிரச்சினை உள்ளவர்கள்**

சிலருக்கு குறிப்பிட்ட உணவுகளால் ஒவ்வாமை ஏற்படலாம். கேரட் சாப்பிட்ட பிறகு அரிப்பு, வீக்கம், தொண்டையில் உறுத்தல் அல்லது மூச்சு விடுவதில் சிரமம் போன்ற அறிகுறிகள் ஏற்பட்டால், உங்களுக்கு கேரட் ஒவ்வாமை இருக்கலாம். அப்படியென்றால், நீங்கள் உடனடியாக அவற்றை உண்பதை நிறுத்திவிட்டு மருத்துவரை அணுக வேண்டும்.

**கேரட் சாற்றின் 3 அற்புதமான நன்மைகள்**

முறையான அளவிலும் விதிகளின்படியும் உட்கொள்ளும்போது, கேரட் சாறு உடலுக்கு ஒரு உயிர் காக்கும் மருந்தாகச் செயல்படுகிறது.

பளபளப்பான சருமம்: கேரட் சாற்றில் உள்ள வைட்டமின் A மற்றும் ஆன்டி–ஆக்ஸிடன்ட்கள் சருமத்தில் உள்ள சுருக்கங்களைக் குறைத்து, முகப்பருவைக் கட்டுப்படுத்துகின்றன.

கண் பார்வையை மேம்படுத்துதல்: வயது முதிர்வு தொடர்பான கண் பிரச்சனைகளைத் தடுப்பதற்கும், கண் பார்வையை வலுப்படுத்துவதற்கும் கேரட் சாறு ஒரு சிறந்த தீர்வாக அமைகிறது.

நோய் எதிர்ப்பு சக்தி: அடிக்கடி நோய்த்தொற்றுகளால் பாதிக்கப்படுபவர்களுக்கு கேரட் சாறு ஒரு சிறந்த தேர்வாகும். இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, நோய்களை எதிர்த்துப் போராடுவதற்கான வலிமையை அளிக்கிறது.

# வெள்ளை அறிக்கையில் திருப்தி இல்லை: அதிகாரிகளுக்கு முதல்வர் விஜய் டோஸ்!



சென்னை, ஜூன். 18–

தமிழக நிதிநிலை குறித்து, நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையில், மக்களுக்கு தெரிவிக்க வேண்டிய தகவல்களை தெரிவிக்காதது, முதல்வர் விஜயிடம் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. இதனால் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு, அவர் 'டோஸ்' விட்டதாக, தகவல் வெளியாகி உள்ளது. தமிழக சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்ற, தமிழக வெற்றிக் கழகம், மே 10ம் தேதி ஆட்சி அமைத்தது. கடந்த தி.மு.க., ஆட்சியின் நிதிநிலை குறித்து, விரிவான வெள்ளை அறிக்கை வெளியிடப்படும் என, முதல்வர் விஜய் அறிவித்தார். அதன்படி, நிதி அமைச்சர் மரிய வில்சன், நேற்றுமுன்தினம் வெள்ளை அறிக்கை வெளியிட்டார். இதில் நிதி முறைகேடு குறித்த விபரம் எதுவும் இடம் பெறவில்லை. இது, அரசு மீது எதிர்மறையான விமர்சனத்தை ஏற்படுத்தி உள்ளது.

இது குறித்து, த.வெ.க., வட்டாரங்கள் கூறியதாவது: நிதி விவகாரத்தில், தி.மு.க., அரசு செய்த தவறுகளை பட்டியலிட, அவர்களின் ஆட்சி காலத்தில் இருந்த, நிதித்துறை உயர் அதிகாரிகளால்தான் முடியும். ஆனால், நிதித்துறை உயர் அதிகாரிகள், தி.மு.க., வுடன் நேரடி தொடர்பில் இருந்ததால், அவர்களை உடனே மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. புதிதாக நியமிக்கப்பட்ட ஐ.ஏ.எஸ்., அதிகாரிகளுக்கு துறை சார்ந்த அனுபவமில்லை. குறிப்பாக, பழைய உயர் அதிகாரி ஒருவருக்கு நெருக்கமாக இருந்தனர். எனவே, வெள்ளை அறிக்கை தயார் செய்வது, பெரும் சிரமமாகிவிட்டது.இந்நிலையில், வெள்ளை அறிக்கை வெளியிடப்படும் முன், முதல்வரிடமும், அவருக்கு நெருக்கமான கட்சியின் மேலிட புள்ளிகள் பார்வைக்கும், அறிக்கை அளிக்கப்பட்டது.

அப்போது, தமிழகத்தின் கடன் 10 லட்சம் கோடி இல்லை; 13 லட்சம் கோடி என்பதை பிராதானப்படுத்தி, பட்ஜெட் கூட்டத்தொடரில், தி.மு.க.,வை 'ஆப்' செய்ய திட்டமிடப்பட்டது.

ஆனால், வெள்ளை அறிக்கை வெளியிடும் நிகழ்வில், அமைச்சரும், அதிகாரிகளும், மொத்தமாக சொதப்பி விட்டனர். தி.மு.க.,வுக்கு எதிராக, எந்த குற்றச்சாட்டையும் முன் வைக்கவில்லை. முதல்வரிடமும், அவருக்கு நெருக்கமானவர்களிடமும் கூறியதை கூட, வெள்ளை அறிக்கை வெளியீடு நிகழ்வில் பேசவில்லை. கடன் அளவும் கட்டுக்குள் இருப்பதாக அதிகாரி கூறியது, வெள்ளை அறிக்கை வெளியீட்டின் நோக்கத்தையே சிதைத்து விட்டது.

தி.மு.க., ஆட்சியில் வெளியிடப்பட்ட, பல்வேறு திட்டப் பணிகளுக்கான 'டெண்டரில்' அதிக தொகை குறிப்பிட்டு, மோசடி நடந்திருப்பதாக, அமைச்சர்கள் தெரிவித்திருந்தனர். இது போன்ற டெண்டர்களால், எவ்வளவு நிதி வீணடிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிவிக்கப்படவில்லை. துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில், எவ்வளவு செலவிடப்படாமல் திரும்பி வந்தது, எவ்வளவு முறையாக செலவழிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடப்படவில்லை.

இதனால், தி.மு.க.,வுக்கு எதிராக, த.வெ.க., –– ஐ.டி., அணியாலும் களமாட முடியவில்லை. கட்சி தலைமைக்கும் திருப்தி இல்லை. இதனால், வெள்ளை அறிக்கையை தயார் செய்த அதிகாரிகள் குழுவுக்கு, முதல்வர் விஜய் 'டோஸ்' விட்டுள்ளார். சட்டசபை கூட்டத்தொடரில், வெள்ளை அறிக்கையில் விடுபட்ட பல விஷயங்களை, முதல்வரின் பதிலுரையில் இணைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# வாட்ஸ்அப் மூலம் சொத்து வரி, குடிநீர் கட்டணங்களை எளிதாக செலுத்தலாம்!




சென்னை, ஜூன். 18–

சென்னை மாநகராட்சியின் வாட்ஸ்அப் செயலி வாயிலாக சொத்து வரி மற்றும் குடிநீர், கழிவுநீர் கட்டணங்களை எளிதாக செலுத்தலாம் என்று மாநகராட்சி ஆணையாளர் ஜி.எஸ்.சமீரன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:– சென்னை மாநகராட்சி, பொதுமக்களின் வசதிக்காக பல்வேறு குடிமை சேவைகளை இணையதளம் மற்றும் வாட்ஸ்அப் தளங்கள் மூலம் வழங்கி வருகிறது. சொத்து வரி செலுத்துதல், பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் சேவைகள், புகார் பதிவு மற்றும் கண்காணிப்பு உள்ளிட்ட 42 சேவைகளுடன், தற்போது சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் (CMWSSB) குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டணங்களையும் வாட்ஸ்அப் வழியாக செலுத்தும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் மாநகராட்சியின் அதிகாரப்பூர்வ வாட்ஸ்அப் சாட்பாட் எண் 94450 61913 மூலம் தங்களது சொத்து வரி, குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டணங்களை எளிதாகவும், பாதுகாப்பாகவும் செலுத்தலாம். மேலும் கட்டண விவரங்கள், நிலுவைத் தொகைகள் மற்றும் ரசீதுகளையும் உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம். இச்சேவைகள் மூலம் பொதுமக்கள் அலுவலகங்களுக்கு நேரில் செல்ல வேண்டிய அவசியம் குறைவதுடன், நேரமும் செலவும் சேமிக்கப்படுகிறது. பொதுமக்கள் 24 மணி நேரமும் தங்களுக்கு ஏற்ற நேரத்தில் இந்த சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து பொதுமக்களும் வாட்ஸ்அப் சேவைகளைப் பயன்படுத்தி தங்களது சொத்து வரி, குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டணங்களை காலதாமதமின்றி செலுத்தி இச்சேவைகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தவெக கூட்டணியில் மதிமுக இணைகிறதா?



டில்லி சிறப்பு பிரதிநிதியாக வைகோ?

சென்னை, ஜூன். 18–

''தமிழக வெற்றிக் கழக கூட்டணியில் ம.தி.மு.க., சேருவது குறித்து, பொதுக்குழுவில் ஆலோசித்து முடிவு அறிவிக்கப்படும்,'' என, ம.தி.மு.க., பொதுச்செயலர் வைகோ கூறினார்.

சென்னை தலைமை செயலகத்தில் நேற்று, முதல்வர் விஜயை, ம.தி.மு.க., பொதுச்செயலர் வைகோ சந்தித்து பேசினார். இந்த சந்திப்பு 45 நிமிடங்கள் நீடித்தது. பின், வைகோ அளித்த பேட்டி: த.வெ.க., அரசு அமைந்த பின், 'கமிஷன்' என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆரோக்கியமான நிர்வாகம் உள்ளது.

தூத்துக்குடி 'ஸ்டெர்லைட் காப்பர்' ஆலையை, 'கிரீன் காப்பர்' என்ற பெயரில் மீண்டும் தொடங்க முயற்சி நடக்கிறது. தாமிர இறக்குமதி செய்ய வேண்டி உள்ளதாக, பிரதமர் மோடியும் சமீபத்தில் பேசியுள்ளார். ஸ்டெர்லைட் ஆலை அதிபர்கள், முதல்வரை சந்திக்க அனுமதி பெற முயற்சிக்க கூடும். அவர்களுக்கு அனுமதி தரக்கூடாது என்பதற்காக, முதல்வர் விஜயை சந்தித்தேன். பிரதமர் மோடி விரும்பினால், மஹாராஷ்டிரா, குஜராத் மாநிலங்களில், அதை அமைத்துக் கொள்ளலாம். தமிழகத்தில் இடம் கொடுக்கக்கூடாது என, விரிவான அறிக்கையை முதல்வரிடம் அளித்துள்ளேன். எனது 30 ஆண்டு பார்லிமென்ட் உரைகளை ஆறு தொகுப்புகளாக புத்தகமாக தயாரித்துள்ளேன். அதை டில்லியில், வரும் ஆகஸ்ட் 4ம் தேதி வெளியிட உள்ளேன்.

துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட, அனுமதி கேட்க உள்ளேன். முதல் பிரதியை முதல்வர் விஜய் பெற வேண்டும் என வலியுறுத்தினேன். நிகழ்ச்சிக்கு வருவதாக, முதல்வர் உறுதியளித்துள்ளார். ம.தி.மு.க., – எம்.எல்.ஏ.,க்கள் ராஜினாமா செய்து விட்டு, மீண்டும் தேர்தலில் போட்டியிடுவர் என்ற விவாதங்கள் நடக்கின்றன. அந்த கற்பனை, யூகங்களுக்கு என்னால் பதில் சொல்ல முடியாது. த.வெ.க., கூட்டணியில் ம.தி.மு.க., சேருமா என்ற கேள்விக்கு, இப்போது பதில் கிடைக்காது. ம.தி.மு.க., பொதுக்குழு கூட்டத்தில், முடிவு அறிவிக்கப்படும். இவ்வாறு வைகோ கூறினார்.

**டில்லி சிறப்பு பிரதிநிதியாக வைகோ?**

தமிழக அரசின் டில்லி சிறப்பு பிரதிநிதியாக வைகோவை நியமிக்க, முதல்வர் விஜய் முடிவு செய்துள்ள தகவல் வெளியாகி உள்ளது. இது குறித்து, ம,தி.மு.க., வட்டாரங்கள் கூறியதாவது: தி.மு.க., கூட்டணியில் இருந்து, ம.தி.மு.க., வெளியேறுவது உறுதியாகி விட்டது. பொதுக்குழுவுக்கு பின், உதயசூரியன் சின்னத்தில் வென்ற ம.தி.மு.க., – எம்.எல்.ஏ.,க்கள் இருவரும் ராஜினாமா செய்வர். இடைத்தேர்தலில், அவர்கள் தனி சின்னத்தில் போட்டியிடுவர். தமிழக கோரிக்கைகளை, மத்திய அரசிடம் சேர்க்கவும், தமிழகத்திற்கான நிதியை பெறவும், தமிழக அரசின் டில்லி சிறப்பு பிரதிநிதியாக, வைகோவை நியமிக்க, முதல்வர் விஜய் முடிவு செய்துள்ளார். அமைச்சருக்கு இணையான அந்தஸ்து கொண்ட இந்த பதவி, ஓராண்டு காலம் தான். எனினும், த.வெ.க., ஆட்சி இருக்கும் வரை நீடிக்கும் வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அந்த வட்டாரங்கள் கூறினர்.

# ராமர் கோவில் நன்கொடை முறைகேடு: அறக்கட்டளை நிர்வாகிகளிடம் விசாரணை!



அயோத்தி, ஜூன். 18–

ராமர் கோவில் நன்கொடை நிதியில் இருந்து 24 கோடி ரூபாய் வரை மாயமானதாக குற்றச்சாட்டு எழுந்தது. கோவிலின் கணக்கு வழக்கை ஆய்வு செய்த முன்னாள் அதிகாரி மகிபால் சிங், உண்டியல் மற்றும் நன்கொடை பணத்தை எண்ணுவதில் முறைகேடுகள் நடப்பதாக குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பாக விசாரணை நடத்த உ.பி., அரசு சிறப்பு விசாரணை குழுவை அமைத்தது. இந்த குழு, ஸ்ரீராம ஜென்மபூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளையின் பொதுச் செயலர் சம்பத் ராய், நிர்வாகி கோபால் ராய் உள்ளிட்டோரிடம் நேற்று விசாரணை நடத்தியது.

பணம் எண்ணும் பணியில் ஈடுபட்ட சில ஊழியர்களின் வீடுகளில் போலீசார் சோதனை நடத்தி, லட்சக்கணக்கான ரொக்கம் மற்றும் சொத்துக்களை பறிமுதல் செய்தனர்.

# வேலை வாய்ப்பு

## சென்ட்ரல் வங்கி ஆஃப் இந்தியாவில் 4,500 அப்ரண்டிஸ் பணியிடங்கள் பட்டதாரிகளுக்கு அரிய வேலைவாய்ப்பு!




நிறுவனத்தின் பெயர்: சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
பணி அமைப்பு: தொழிற்பழகுநர் பயிற்சி (Apprentices Training)
மொத்த காலிப்பணியிடங்கள்: 4500 தொழிற்பழகுநர் பணியிடங்கள்
பணியிடம்: இந்தியா முழுவதும்
தொடக்கத் தேதி: 12.06.2026
கடைசித் தேதி: 22.06.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://centralbank.bank.in/

# திருச்சி கிழக்கு தொகுதியில் விசிக நிர்வாகி போட்டி?



திருச்சி, ஜூன். 18–

"ஒரே மாதத்தில், த.வெ.க., அரசு குறித்து, எந்த மதிப்பீட்டையும் சொல்ல இயலாது,'' என விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் தெரிவித்தார்.

திருச்சியில் அவர் அளித்த பேட்டி: தமிழக அரசின் வெள்ளை அறிக்கையில், 13 லட்சம் கோடி கடன் இருப்பதாக கூறியிருப்பதற்கு, ஏற்கனவே, ஆட்சியில் இருந்த தி.மு.க., தான் பதில் சொல்ல வேண்டும். புதிதாக பதவியேற்ற த.வெ.க., அரசுக்கு, கற்றுக் கொள்ளும் காலம், என்று தான் சொல்ல முடியும். எனவே, ஒரு மாத கால ஆட்சியை பற்றி மதிப்பீடு சொல்ல இயலாது.

அ.தி.மு.க.,வில் என்ன நடக்கிறது என்பது தெரியவில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ.,க்கள், பதவியை ராஜினாமா செய்யும் அளவுக்கு என்ன நெருக்கடி என்பது அவர்களுக்கு தான் தெரியும். திராவிட இயக்கம் என்ற முறையில், அ.தி.மு.க., வலுவாகவும், சிதறாமலும் இருப்பது தான் தமிழக அரசியலுக்கு நல்லது.

வி.சி.க., முதன்மை செயலர் ஷா நவாஸ், புதிய கட்சி தொடங்கி, திருச்சி கிழக்கு தொகுதியில் போட்டியிடப் போகிறார் என்பது தவறான தகவல். வெளிநாடு சென்று திரும்பி இருக்கும் அவர், கட்சி தலைமையோடு தொடர்பில் தான் இருக்கிறார். விரைவில் என்னை சந்திக்க வாய்ப்பு இருக்கிறது. அவருடன் கலந்து பேசி முடிவு எடுக்கவில்லை என்பதை தவிர, அவருக்கு வேறு எந்த வருத்தமும் இல்லை. திட்டமிட்டு, வி.சி.க.,வை குறி வைத்து அவதுாறுகளை பரப்புகின்றனர். எளிய மக்களுக்கான இந்த இயக்கத்தை உடைத்து, என்ன சாதிக்கப் போகின்றனர் என்று விளங்கவில்லை. எங்கள் கட்சிக்குள் குழப்பமும் இல்லை; எந்த பிரச்னையும் இல்லை. இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

# ரூ.1,209 கோடி திட்டங்களுக்கு இந்திய ரெயில்வே ஒப்புதல்!

புதுடெல்லி, ஜூன். 18–

இந்திய ரெயில்வே 4 புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. குஜராத்தில் ரெயில்வே உட்கட்டமைப்பு மற்றும் திறன் மேம்பாட்டுக்கு ஊக்கமளிக்கும் வகையில், மேற்கு ரெயில்வேயின் ஆதிப்பூர்–புஜ் பிரிவை (49 கி.மீ.) ரூ.493 கோடி செலவில் இரட்டிப்பாக்க ஒப்புதல் அளித்துள்ளது. மராட்டியத்தில் ரெயில் திறனை அதிகரிப்பதற்கும், சரக்கு போக்குவரத்தை மேம்படுத்துவதற்கும் ரூ.172 கோடி ஒப்புதல் அளித்துள்ளது. கிழக்கு ரெயில் வேயில் மின்னணு 'இன்டர்லாக்கிங்' அமைப்புகளை நிறுவ ரூ.405 கோடி மதிப்பிலான திட்டத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

அதுபோல மத்தியபிரதேசத்தில் இந்தூர் யார்டில் உள்ள சாஸ்திரிய பாலம் என பிரபலமாக அறியப்படும் சாலை மேம்பாலத்தை ரூ.139 கோடி செலவில் புனரமைக்க ஒப்புதல் அளித்து இருக்கிறது. இந்த திட்டங்களின் மொத்த மதிப்பு ரூ.1,209 கோடி ஆகும்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



## இன்றைய கார்ட்டூன்




## 5 நாள் பயணமாக மத்தியப் பிரதேசம் சென்றார் ஜனாதிபதி திரவுபதி முர்மு!



போபால், ஜூன். 18–

ஐந்து நாள் பயணமாக ஜனாதிபதி திரவுபதி முர்மு, மத்தியப் பிரதேசம் சென்றுள்ளார். டெல்லியில் இருந்து இந்தூர் வந்தடைந்த திரவுபதி முர்முவை, மத்தியப் பிரதேச கவர்னர் மங்கு பாய் படேல் மற்றும் முதல் மந்திரி மோகன் யாதவ் ஆகியோர் வரவேற்றனர்.

முதலில் போதுல் நகருக்கும் செல்லும் ஜனாதிபதி திரவுபதி முர்மு, தனியார் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள உள்ளார். அதன் பின்னர் இன்று மாலை புகழ்பெற்ற ஓம்காரேஷ்வர் மற்றும் மாமலேஷ்வர் கோவில்களில் சாமி தரிசனம் செய்கிறார். நாளை மாலை ஜபல்பூர் செல்லும் ஜனாதிபதி, 21–ம் தேதி நடைபெறும் சர்வதேச யோகா தின நிகழ்ச்சியிலும், ராணி துர்காவதி பல்கலைக்க முகத்தின் பட்டமளிப்பு விழா விலும் கலந்துகொள்கிறார்.

22–ந்தேதி குனோ தேசியப் பூங்காவைப் பார்வையிட்டு விட்டு, பின்னர் டெல்லி திரும்புவார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு மத்தியபிர தேசத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

## கேரளாவில் அதிகரிக்கும் ஷிகெல்லா தொற்று!



மலப்புரம், ஜூன். 18–

கேரளாவில் ஷிகெல்லா எனப்படும் பாக்டீரியா தொற்று விரைவாக பரவி வருகிறது. இதில், கோழிக்கோடு மாவட்டத்தில் அதிக பாதிப்புகள் பதிவாகி உள்ளன. இதில், கடந்த ஜனவரியில் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில், சீராக பாதிப்பு அதிகரித்து வருகிறது. இந்த நிலையில், கடந்த 12–ந்தேதி அர்ஜாவ் (வயது 7) என்ற சிறுவனுக்கு காய்ச்சல் மற்றும் டயோரியா பாதிப்பு ஏற்பட்டு, கோழிக்கோடு அரசு மருத்துவ கல்லூரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இதன்பின்னர், அந்த சிறுவனுக்கு ஷிகெல்லா தொற்று உறுதி செய்யப்பட்டது. எனினும், சிகிச்சை பலனின்றி அர்ஜாவ் பலியானான். இந்த நிலையில், கேரளாவின் மலப்புரம் மாவட்டத்தில் வசித்து வந்த 75 வயது மூதாட்டி ஒருவர் மரணம் அடைந்துள்ளார். இதனை மாநில சுகாதார துறை இன்று தெரிவித்து உள்ளது.

இதனால், கேரளாவில் ஷிகெல்லா தொற்றுக்கு மரணம் அடைந்தோர் எண்ணிக்கை 6 ஆக உயர்ந்து உள்ளது. நேற்று ஒருவர் பலியான நிலையில், 5 ஆக அதிகரித்து இருந்தது. அதற்கு முன்பு சிறுவன் அர்ஜாவ் பலியானபோது இந்த எண்ணிக்கை 4 ஆக இருந்தது.

இந்த ஷிகெல்லா தொற்று ஏற்பட்டால், டயோரியா, காய்ச்சல் மற்றும் வயிற்று பிடிப்பால் வலி போன்றவை ஏற்படும். கெட்டுப்போன உணவு அல்லது தண்ணீர் மற்றும் தொற்று ஏற்பட்ட நபரிடம் இருந்து இந்த வியாதி பரவும். அதனால், மக்கள் எச்சரிக்கையுடன் இருக்கும்படி அறிவுறுத்த ப்பட்டு உள்ளது. கேரள சுகாதார துறை மந்திரி முரளீதரன் நேற்று கூறும் போது, கடந்த ஜனவரியில் இருந்து இதுவரை 146 ஷிகெல்லா பாதிப்புகள் உறுதி செய்யப்பட்டு உள்ளன. இவற்றில் 70 பேருக்கு கடந்த ஜூனில் தொற்று உறுதியாகி உள்ளது என கூறினார். இது மொத்த பாதிப்பில் 50 சதவீதம் ஆகும். இதனால், நடப்பு மாதத்தில் இந்த பாதிப்பு மளமளவென அதிகரித்து உள்ளது தெரிய வந்துள்ளது. அதற்கான முன்னெச்சரிக்கை மற்றும் பரிசோதனை நடவடிக்கை களை அரசு தீவிரப்படுத்தி வருகிறது.

## இடையூறுகளை தாண்டி 2025-26 நிதியாண்டில் ஏற்றுமதியில் சாதனைப் படைத்த இந்தியா..!!




அமெரிக்கா, ஜூன். 18–

அமெரிக்க அதிபராக 2–வது முறை பதவி ஏற்றதும், டொனால்டு டிரம்ப் உலக நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ள விரும்பினார். அமெரிக்காவுக்கு ஏற்றவகையில் வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்த நாடுகள் மீது, அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் மீது அதிக வரி விதித்தார். இந்திய பொருட்களுக்கு பரஸ்பர வரியாக 25 சதவீதம் வரி விதித்தார். பின்னர், ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கியதால், கூடுதலா 25 சதவீதம் வரி விதித்தார். இதனால் இந்தியாவின் ஏற்றுமதி மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டது.

பின்னர் கடந்த பிப்ரவரி மாதம் அமெரிக்கா–ஈரான் போர் காரணமாக மேற்காசிய பிராந்தியத்தில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. ஈரான் ஹார்முஸ் ஜலசந்தியை மூடியதால் உலகளவில் வர்த்தக இடையூறு ஏற்பட்டது. கொரோனா தொற்று காலத்தில் லாக்டவுன் போட்டது போன்ற சூழ்நிலைக்கு உலக நாடுகள் தள்ளப்பட்டன.

இந்த சவால்களை எல்லாம் எதிர்கொண்டு ஏற்றுமதியில் இந்தியா சாதித்துள்ளது. 2025–26 நிதியாண்டில் இந்தியா 863 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிற்கு ஏற்றுமதி செய்துள்ளது. இந்த தகவலை வர்த்தக அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வர்த்தக துறையின் கூடுதல் செயலாளர் அஜய் பதூ கூறுகையில் "அமெரிக்காவின் வர்த்தக வரி விதிப்புகள் முதல் மேற்கு ஆசிய நெருக்கடிகள் வரை இது மிகவும் சவாலான ஆண்டாக அமைந்த போதிலும், ஏற்றுமதிச் சூழல் அமைப்பைப் பொறுத்தவரை இந்தியா மிகுந்த மீள்திறன் கொண்டது என்பதை நாம் நிரூபித்துள்ளோம். 2025–26 நிதியாண்டில் இந்தியாவின் மொத்த ஏற்றுமதி 863 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற வரலாற்றுச் சாதனை அளவை எட்டியது" எனத் தெரிவித்துள்ளார்.

## அனைத்து அரசு பஸ்களிலும் மகளிர் இலவச பயண திட்டம்: முதல்வர் விஜய் ஆலோசனை!



சென்னை, ஜூன். 18–

அனைத்து அரசு பஸ்களிலும் மகளிர் இலவச பயண திட்டத்தை விரிவாக்கம் செய்வது குறித்து, முதல்வர் விஜய் ஆலோசனை நடத்தினார்.

தமிழக போக்குவரத்து துறையின் செயல்பாடுகள் குறித்து, முதல்வர் விஜய் தலைமையில் நேற்று தலைமை செயலகத்தில் ஆய்வுக்கூட்டம் நடந்தது.

போக்குவரத்து துறையின் கீழ் இயங்கும் எட்டு அரசு போக்குவரத்துக் கழகங்கள் வாயிலாக, 21,527 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இவற்றில், 2.05 கோடி பேர் பயணம் செய்கின்றனர். இவர்களில், 64 சதவீதம் பேர் பெண்கள். இவர்கள் இலவசமாக பயணம் செய்யும் விபரத்தை, முதல்வரிடம் அரசு போக்குவரத்துக் கழக அதிகாரிகள் எடுத்துரைத்தனர். ' மேலும், அரசு போக்குவரத்துக் கழகங்களை மேம்படுத்தும் செயல் திட்டங்கள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. தற்போது நகர பஸ்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டுள்ள மகளிர் இலவச பயணத்தை, அனைத்து பஸ்களுக்கும் விரிவுப்படுத்துவது, மின்சார பஸ்களை அதிகரிப்பது, போக்குவரத்து ஊழியர்களின் பிரச்னைக்கு தீர்வு காண்பது ஆகியவை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

## அரசாணையை மீறி அரசு உதவிபெறும் பள்ளிகளில் சிறப்பு கட்டணம் வசூலிப்பது ஏன்? ஐகோர்ட்டு கேள்வி!



மதுரை, ஜூன். 18–


தேனி மாவட்டம் உத்தமபாளையத்தை சேர்ந்த மைக்கேல் தங்கராஜ் என்பவர், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது:–

தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் மாணவர்களிடம் இருந்து சிறப்பு கட்டணம் வசூலிப்பதை ரத்து செய்து கடந்த 2008–ம் ஆண்டில் அரசாணை பிறப்பிக்கப்பட்டது. ஆனாலும் அந்த அரசாணையை மீறி பல பள்ளிகளில் மாணவர்களிடம் இருந்து எந்தவித கட்டுப்பாடும் இன்றி கட்டணம் வசூலிக்கப்படுகிறது. குறிப்பாக ராமநாதபுரம், திருவண்ணாமலை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் மாணவர்களின் பெற்றோர் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

எனவே ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் மேற்கண்ட அரசாணைக்கு எதிராக கட்டணம் வசூலிக்கிறார்களா என்பது பற்றி விசாரணை நடத்தவும், அரசு உதவி பெறும் பள்ளிகளில் அரசாணைக்கு எதிராக கட்டணம் வசூலிக்கப்படவில்லை என்பதை உறுதி செய்ய வழிகாட்டுதல்களை ஏற்படுத்தவும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது சம்பந்தப்பட்ட பள்ளிகள் சார்பில் ஆஜரான வக்கீல்கள், இதுசம்பந்தமாக பாதிக்கப்பட்டதாக கூறப்படும் பெற்றோரே கோர்ட்டினை அணுகலாம். இதுகுறித்து ஏற்கனவே கோர்ட்டும் உத்தரவு பிறப்பித்து உள்ளது என தெரிவித்தனர்.

அதற்கு நீதிபதிகள், கல்விக்கட்டணம் வசூலிப்பது தொடர்பாக அரசாணை வெளியிட்டும், அதனை மீறி எதன் அடிப்படையில் அரசு உதவிபெறும் பள்ளிகளில் சிறப்பு கட்டணம் வசூலிக்கப்படுகிறது? என கேள்வி எழுப்பினர். பின்னர் இதுகுறித்து தமிழக பள்ளிக்கல்வித்துறை செயலாளர், இயக்குனர் உள்ளிட்ட அதிகாரிகள் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும் என நீதிபதிகள் உத்தரவிட்டு விசாரணையை ஒத்தி வைத்தனர்.



### தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**நிகழ்ச்சி நிரல்**

19.6.2026 (வெள்ளிக்கிழமை) :

I. **இரங்கற் குறிப்புகள்**

சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து.

II. **இரங்கல் தீர்மானங்கள்**

1. தோழர் திரு. நல்லகண்ணு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் அவர்கள் மறைவு குறித்து.
2. திரு. சி.கு. இராமசாமி, சட்டமன்றப் பேரவை முன்னாள் செயலாளர் அவர்கள் மறைவு குறித்து.
3. திரு. ஆர்.பி. சௌத்ரி, பிரபல திரைப்படத் தயாரிப்பாளர் அவர்கள் மறைவு குறித்து.
4. திரு. கே. ராஜன், பிரபல திரைப்படத் தயாரிப்பாளர் அவர்கள் மறைவு குறித்து.
5. திரு. பாரதிராஜா, பிரபல திரைப்பட இயக்குநர் அவர்கள் மறைவு குறித்து.

III. ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் முன்மொழியப்பெற்று விவாதம் தொடங்குதல்.

20.6.2026 (சனிக்கிழமை) : அரசு விடுமுறை நாள்.

21.6.2026 (ஞாயிற்றுக்கிழமை) : அரசு விடுமுறை நாள்.

22.6.2026 (திங்கட்கிழமை) : ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் – தொடர்ச்சி.

23.6.2026 (செவ்வாய்க்கிழமை) :

I. ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதிலுரை.

II. அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல் மற்றும் நிறைவேற்றுதல்.

III. ஏனைய அரசினர் அலுவல்கள்.

பேரவை வழக்கம்போல் காலை 9.30 மணிக்குக் கூடும்.

இரா. சாந்தி,
செயலாளர்.

## என் மகன் அரசியலுக்கு வரமாட்டார்- எடப்பாடி!



சென்னை, ஜூன். 18–

தமிழக சட்டசபை வளாகத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது, கவர்னர் ஆற்றிய உரை மற்றும் த.வெ.க. அரசு மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்களை முன்வைத்தார். இதனிடையே, எடப்பாடி பழனிசாமி கூறுகையில்,

* எனது மகன் மிதுன் அரசியலுக்கு வரமாட்டார். எனது மகன் அரசியலுக்கு வருவதாக கூறுவது தவறு.

* அ.தி.மு.க.வில் அடிப்படை உறுப்பினராக மட்டுமே எனது மகன் மிதுன் உள்ளார்.

* அ.தி.மு.க.வில் எந்த பதவியிலும் எனது மகன் மிதுன் இல்லை.

* என்னுடைய மகன் மிதுன் அரசியலுக்கு வர மாட்டார் என திட்டவட்டமாக கூறுகிறேன் என்றார்.

முன்னதாக, தனது மகன் மிதுனுக்கு அ.தி.மு.க.வில் பொறுப்பு வழங்குவதாக எடப்பாடி பழனிசாமி மீது குற்றச்சாட்டு எழுந்தது குறிப்பிடத்தக்கது.

## 2027-ம் ஆண்டு உலகப் பல்கலைக்கழகத் தரவரிசை பட்டியல்; டில்லி ஐஐடி 2-வது ஆண்டாக சாதனை!




புதுடெல்லி, ஜூன். 18–

தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக, (க்யூ.எஸ்) உலகப் பல்கலைக்கழகத் தரவரிசை பட்டியலில் (2027) இந்திய கல்வி நிறுவனங்கள் பட்டியலில் டில்லி ஐஐடி முதலிடம் பிடித்துள்ளது. உலகின் சிறந்த பல்கலைகளின் தரவரிசைப் பட்டியலை ஆண்டு தோறும் லண்டனை சேர்ந்த குவாக்கரெல்லி சைமன்ட்ஸ் (க்யூ.எஸ்) என்ற தனியார் கல்வி ஆய்வு நிறுவனம் வெளியிட்டு வருகிறது. தற்போது, 2027ம் ஆண்டிற்கான உலக பல்கலை தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது. , 106 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் உள்ள 1,500–க்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்களை ஆய்வு செய்து இந்த பட்டியல் தயாரிக்கப்பட்டு உள்ளது.

தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக, இந்திய கல்வி நிறுவனங்கள் பட்டியலில் டில்லி ஐஐடி முதலிடம் பிடித்துள்ளது. இது உலக அளவில் ஐந்து இடங்கள் முன்னேறி 118வது இடத்தைப் பெற்றுள்ளது. அதேநேரத்தில் ஐஐடி பாம்பே 129–வது இடத்திலிருந்து 134–வது இடத்திற்குச் சரிந்தது.

உலகின் முதல் டாப் 5 பல்கலைக்கழகங்கள்!

1.மாசசூசெட்ஸ் தொழில்நுட்பக் கழகம் 15வது ஆண்டாக இந்தப் பட்டியலில் முதலிடம் பிடித்தது.

2.ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகம்,

3. இம்பீரியல் கல்லூரி,

4. ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம்

5.ஹார்வர்டு பல்கலைக்கழகம்.

இந்தியாவின் டாப் 10 பல்கலை பட்டியல்;

1.ஐஐடி டில்லி– 118வது இடம்

2.ஐஐடி பாம்பே–134வது இடம்

3.ஐஐடி–மெட்ராஸ்–170வது இடம்

4.ஐஐடி–கரக்பூர் –205வது இடம்

5. ஐஐடி–கான்பூர்– 221வது இடம்

6.இந்திய அறிவியல் கழகம், பெங்களூரு–221வது இடம்

7.டில்லி பல்கலைக்கழகம்– 322வது இடம்

8.ஐஐடி–ரூர்க்கி– 335வது இடம்

9. ஐஐடி– குவஹாத்தி– 349வது இடம்

10. உயிரி தொழில்நுட்பம் பல்கலை, ஹிமாச்சலப் பிரதேசம்– 452வது இடம்

ஒட்டுமொத்தமாக, 26 இந்தியப் பல்கலைக்கழகங்கள் தங்கள் தரவரிசையை மேம்படுத்தியுள்ளன, ஒன்பது மாற்றமின்றி உள்ளன, 15 சரிந்துள்ளன. 52 இந்தியப் பல்கலைக்கழகங்கள் இடம்பெற்றுள்ளன. இதேபோல், தனியார் பல்கலைக்கழகங்களும் மிகப்பெரிய முன்னேற்றம் கண்டுள்ளன.

உதாரணமாக, வேலூர் தொழில்நுட்ப நிறுவனம் 94 இடங்கள் முன்னேறி உலக அளவில் 597–வது இடத்தையும், பிலானியில் உள்ள பிர்லா தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் நிறுவனம் 93 இடங்கள் முன்னேறி 575வது இடத்தையும் பிடித்தன. அதே நேரத்தில், ஷூலினி பல்கலைக்கழகம் 51 இடங்கள் முன்னேறி இந்தியாவின் முதல் 10 இடங்களுக்குள் நுழைந்தது.

## பராமரிப்பு பணியால் தாமதமாக இயக்கப்படும் மின்சார ரெயில்கள்: சென்டிரலில் அலைமோதிய கூட்டம்!



சென்னை, ஜூன். 18–

சென்னையில் மின்சார ரெயில் சேவையை நாள்தோறும் லட்சக்கணக்கான பயணிகள் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, பயணிகளின் வசதியை மேம்படுத்தும் வகையில் ரெயில் நிலையம் மறுசீரமைப்பு, தண்டவாளம் பராமரிப்பு உள்ளிட்ட பணிகள் ரெயில்வே நிர்வாகம் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுபோன்ற நேரங்களில் ரெயில்கள் தாமதமாகவும், பகுதி நேரத்தும் செய்யப்படுகின்றன.

அந்தவகையில், தற்போது அரக்கோணம் பணிமனையில் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் மின்சார ரெயில்கள் ரத்தும், சில எக்ஸ்பிரஸ் மற்றும் பயணிகள் ரெயில் பகுதிநேர ரத்தும் செய்யப்பட்டுள்ளன. இந்த பணி காரணமாக ஆங்காங்கே மின்சார ரெயில்கள் நிறுத்தப்பட்டு தாமதமாக இயக்கப்படு கின்றன. குறிப்பாக, அரக்கோணத்தில் நடைபெறும் பராமரிப்பு பணி காரணமாக சென்டிரல் ரெயில் நிலையத்தில் இருந்து அரக்கோணம், கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் வழித்தடத்தில் சில நாட்களாக மின்சார ரெயில்கள் தாமதமாக இயக்கப்படுவதால் பயணிகள் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்று மாலையும் வெகுநேரமாக மின்சார ரெயில்கள் வராததால் சென்டிரல் ரெயில் நிலையத்தில் பயணிகள் கூட்டம் அலைமோதியது. வெகு நேரமாக ரெயிலுக்காக பயணிகள் காத்து கிடந்தனர். மின்சார ரெயில்கள் தாமதமாக இயக்கப்படுவதால் பணிக்கு வர தாமதம் ஆவதாகவும், பணி முடிந்து வீடு திரும்பும்போதும் வெகு நேரம் ரெயிலுக்காக காத்திருக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பயணிகள் வேதனை தெரிவித்தனர். இதற்கு ரெயில்வே நிர்வாகம் ஏதாவது மாற்று ஏற்பாடு செய்ய முடியுமா? என்பதே பயணிகள் பலரின் எதிர்பார்ப்பாக இருந்து வருகிறது.




Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020